36. கிருஷ்ண தேவராயரைத் தொடர்ந்து அவருடைய இளைய சகோதரர் _______ ஆட்சிப் பொறுப்பேற்றார்.

1. ராமராயர்
2. திருமலை தேவராயர்
3. அச்சுதராயர்
4. சதாசிவராயர்

37. திருமலை தேவராயர் விலைமதிக்கமுடியா செல்வங்களோடு சந்திரகிரியில் _______ வம்சத்தின் ஆட்சியைத் தொடங்கினார்.

1.துளுவ 2. சாளுவ 3. ஆரவீடு 4.சங்கம

38. பீஜப்பூர், கோல்கொண்டா சுல்தான்களின் சூழ்ச்சிகளால் விஜயநகர அரசு _______ இல் இறுதியாக வீழ்ச்சியுற்றது.

1. 1625 2. 1660 3.1634 4.1646

39. அரச உரிமையைச் சாளுவ நரசிம்மர் முறைகேடாகக் கைப்பற்றியதால், சங்கம வம்சம் முடிவுற்று _______ வம்ச ஆட்சி தொடங்கியது

1. துளுவ 2. சாளுவ 3. ஆரவீடு 4. சங்கம

40. விஜயநகர அரசமைப்புப் பிரிக்கப்பட்டிருந்த முறை

1. கிராமங்கள், ஸ்தலங்கள் (வட்டங்கள்), நாடுகள் (மாவட்டங்கள்), பேரரசு மண்டலங்கள் (மாநிலம்).
2. நாடுகள் (மாவட்டங்கள்), பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), கிராமங்கள்.
3. பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), ஊர்கள்.
4. பேரரசு மண்டலங்கள் (மாநிலம்), நாடுகள் (மாவட்டங்கள்), ஸ்தலங்கள் (வட்டங்கள்), கிராமங்கள்

LIVEWORKSHEETS

41. விஜயநகரப் பேரரசர்கள் வராகன் என்னும் பெயரில் ______ நாணயங்களை வெளியிட்டனர்.

1. தங்கம் 2. வெள்ளி 3. வைரம் 4. செப்பு

42. கீழ்க்காணும் கூற்றுகளை ஆராய்க.

1. ஒவ்வொரு மண்டலமும் கௌடா என்ற ஆளுநரின் கீழிருந்தது.
2. கிராமமே நிர்வாகத்தின் மிகச் சிறிய அலகாக இருந்தது.
3. ஒவ்வொரு கிராமத்திலும் கிராமசபை என்ற அமைப்பிருந்தது.
4. பேரரசின் இராணுவம் காலாட்படை, குதிரைப்படை, யானைப்படை ஆகிய பிரிவுகளைக் கொண்டிருந்தது.

1. I மற்றும் II சரி 2. I, II மற்றும் III சரி
3. II, III மற்றும் IV சரி 4. III மற்றும் IV சரி

43. கைவினைஞர்களுக்கும் வர்த்தகர்களுக்கும் தனித்தனியே கில்டுகள் என்றழைக்கப்படும் தொழில்சார் அமைப்புகள் இருந்ததாக பாரசீகப் பயணியான ______ குறிப்பிட்டுள்ளார்.

1. அப்துர்ஷா 2. அப்துர் ரஸாக்
3. அலாவுதீன் ஹசன் 4. முகம்மது ரஸாக்

44. தவறான இணையைக் கண்டறியவும்:

1. பட்டு - சீனா
2. வாசனைப் பொருட்கள் - அரேபியா
3. விலைமதிப்பற்ற கற்கள் - பர்மா
4. மதுரா விஜயம் - கங்கா தேவி

45. கிருஷ்ண தேவராயர் அமுக்தமால்யதா என்னும் காவியத்தைத் ______ மொழியில் இயற்றினார்.

1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. பிராகிருதம்

LIVEWORKSHEETS

46. கிருஷ்ண தேவராயர் _______ மொழியில் ஜாம்பவதி கல்யாணம் என்னும் நாடக நூலையும் எழுதினார்.

1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. பிராகிருதம்

47. அலாவுதீன் ஹசன் _______ ஆண்டுகள் ஆட்சி புரிந்தார்

1. 11 2. 15 3. 16 4. 18

48. _______ என்னும் நூலைத் தெனாலி ராமகிருஷ்ணா எழுதினார்.

1. அமுக்தமால்யதா 2. பாண்டுரங்க மகாமத்தியம்

3. ஜாம்பவதி கல்யாணம் 4. மதுரா விஜயம்

49. ஸ்ரீநாதர், பெத்தண்ணா, ஜக்கம்மா, துக்கண்ணா போன்ற புலவர்கள் சமஸ்கிருத, பிராகிருத மொழிகளில் எழுதப்பட்ட நூல்களைத் _______ மொழியில் மொழியாக்கம் செய்தனர்.

1. தமிழ் 2. தெலுங்கு 3. சமஸ்கிருதம் 4. பிராகிருதம்

50. விஜயநகர கட்டட தூண்களில் பெரும்பாலும் காணப்படும் விலங்கு எது?

1. யானை 2. குதிரை 3. பசு 4. மான்

51. அலாவுதீன் ஹசன் தமது அரசை நான்கு மாகாணங்களாகப் பிரித்தார். அவை _______ என அழைக்கப்பட்டன.

1. வட்டங்கள் 2. மண்டலங்கள் 3. தராப் 4. மாவட்டங்கள்

52. பாமினி வம்சத்தில் _______ அரசர்கள் இடம் பெற்றுள்ளனர்.

1. 13 2. 15 3. 18 4. 10

53. 1368 இல் வாரங்கல் அரசோடு போரிட்டு கோல்கொண்டா கோட்டை, பச்சை கலந்த நீல வண்ணக் கற்களால் செய்யப்பட்ட சிம்மாசனம் ஆகியவற்றை இழப்பீடாகப் பெற்றவர் _______.

1. அலாவுதீன் ஹசன் 2. தாவூத்

LIVEWORKSHEETS

3. முதலாம் முகமது ஷா 4. முஜாகித்

54. பாமினி அரசிற்கு வலுவான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தவர் _______.

1. அலாவுதீன் ஹசன் 2. இரண்டாம் முகமது

3. முதலாம் முகமது ஷா 4. முஜாகித்

55. ஒலி தொடர்பான கட்டடக்கலை அம்சங்களுக்கு பெயர்பெற்ற கோட்டை

1. கோல்கொண்டா கோட்டை 2. கள்ளிக்கோட்டை

3. தலைக்கோட்டை 4. பெனுகொண்டா கோட்டை

56. அமீர்-இ-ஜூம்லா பாமினி அரசின் _______ ஆவார்.

1. நிதியமைச்சர் 2 .பொருளாதார அமைச்சர்

3. கல்வி அமைச்சர் 4. அரச ஆலோசகர்

57. பாமினி அரசின் தலைமை நீதிபதி _______ ஆவார்.

1. அமீர்-இ-ஜூம்லா 2. சதார்-இ-ஜஹான்

3. வஷிர்-இ-ஆசாரப் 4. நஷீர்

58. பாமினி அரசின் உதவி நிதி அமைச்சர் _______ ஆவார்.

1. அமீர்-இ-ஜூம்லா 2. சதார்-இ-ஜஹான்

3. வஷிர்-இ-ஆசாரப் 4. நஷீர்

59. பாமினி அரசின் வெளியுறவுத் துறை அமைச்சர் _______.

1. அமீர்-இ-ஜூம்லா 2. சதார்-இ-ஜஹான்

3. வஷிர்-இ-ஆசாரப் 4. நஷீர்

60. பாமினியரசின் வளர்ச்சிக்குப் பெரும் பங்களிப்பைச் செய்த பிரதம அமைச்சர்

1. முஜாகித் 2. தாவூத்

3. முகமது கவான் 4. மகமது கவான்

61. மதுரை சுல்தானிய அரசை முடிவுக்குக்கொண்டு வந்தவர் _______.

LIVEWORKSHEETS

1. சாளுவநரசிம்மர்
2. இரண்டாம் தேவராயர்
3. குமார கம்பணா
4. திருமலை தேவராயர்

62. பாமினி அரசில் சிறந்த மொழியறிஞராகவும், கவிஞராகவும் விளங்கியவர்

1. அலாவுதீன் ஹசன் விரா
2. முகம்மது
3. சுல்தான் பெரோஸ்
4. முஜாஹித்

63. பொருந்தாததைக் கண்டுபிடி:

1. ஹரிஹரர் - II
2. மகமுது
3. கிருஷ்ணதேவராயர்
4. தேவராயர்

64. கூற்றைக் காரணத்தோடு பொருத்துக:

கூற்று: இந்தியாவில் விஜயநகர அரசின் இராணுவம் அச்சுறுத்தக் கூடியதாக இருந்தது.

காரணம்: விஜயநகர இராணுவம் பீரங்கிபடை மற்றும் குதிரைப்படையைக் கொண்டிருந்தது.

1. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம் அல்ல
2. காரணம் கூற்றிற்கான சரியான விளக்கம்
3. காரணம் மற்றும் கூற்று தவறு
4. காரணம் மற்றும் கூற்று சரி

65. பொருத்துக

| | | |
|---|---|---|
| i விஜயநகரம் | - | a. ஒடிசாவின் ஆட்சியாளர் |
| ii. பிரதாபருத்திரன் | - | b. அஷ்டதிக்கஜங்கள் |
| iii. கிருஷ்ணதேவராயர் | - | c. பாண்டுரங்கமகாமத்தியம் |
| iv. அப்துர் ரஸாக் | - | d. வெற்றியின் நகரம் |
| v. தெனாலிராமகிருஷ்ணா | - | e. பாரசீக சிற்பக் கலைஞர் |

1. i - a, ii- b, iii- e, iv - c, v - d
2. i - b, ii- e, iii- c, iv - d, v - a
3. i - e, ii- c, iii- d, iv - a, v - b
4. i - d, ii- a, iii- b, iv - e, v - c

LIVEWORKSHEETS

66. ஆரவீடு வம்சத்தின் தலைநகரம் ______.

1. குல்பர்கா 2. பெனுகொண்டா 3. பாமினி 4. விஜயநகரம்

67. விஜயநகர பேரரசர்களால் வெளியிடப்பட்ட நாணயங்களுக்கு ______ என்று பெயர்

1. வராகன் 2. ரூபாய் 3. தினார் 4. ரியால்

68. மகமது கவான் வெடி மருந்து தயாரிக்கவும் அதனை பயன்படுத்துவது பற்றி விளங்குவதற்காகவும் ______ வேதியியல் அறிஞர்களை வரச் செய்தார்.

1. ஆங்கிலேய 2. பாரசீக 3. போர்ச்சுகீசிய 4. ஐரோப்பா

69. ஹரிஹரர் - புக்கர் ______ வம்சத்தை சேர்ந்தவர்கள்.

1. சங்கம 2. சாளுவ 3. துளுவ 4. ஆரவீடு

70. கிருஷ்ண தேவராயரின் இரண்டாம் இலக்கு ______.

1. ரெய்ச்சூர் 2. தேவகிரி 3. குல்பர்க்கா 4. பீஜப்பூர்

LIVEWORKSHEETS